The Cherian FOUNDATION

12 வது

ஆண்டு நிறைவு

ஃபவுண்டேஷன் நிறுவிய நாள்
11.03.2003

RAJ HOLDINGS

# எதிர்காலம் வளம் பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி - டிசம்பர் 2015 செய்திமடல் | இதழ் : 4

* இந்த செய்தி மடல் ராஜ் குடும்ப உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மட்டுமே.

**தி செரியன் ஃபவுண்டேஷன்**

## இயக்குநர் உரை



அனைவருக்கும் வணக்கம்,

செரியன் ஃபவுண்டேஷனின் பங்காளர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு ஆண்டும், புதிய சவால்களை எதிர்கொண்டு, நம்பிக்கையுடன் செயலாற்றி வருகிறோம். நமது ஃபவுண்டேஷன் தனது 12 ஆண்டு சேவையை வெற்றிகரமாக 2015-ல் செயல்படுத்தியதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவருவதில் பெருமிதம் அடைகிறேன். மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் MMRT -42 வின் தலைவராக திரு. ஜார்ஜ் B செரியன் அவர்கள் பள்ளிக்கரணையில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளியில் 18 வகுப்பறைகள் கட்டியமைக்கு எங்களது பாராட்டுக்கள் மற்றும் நமது மேலாண்மை அறங்காவலர் திரு.பெஞ்சமின் செரியன், அவர்கள் ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு மிஷனின் TEACH திட்டத்தில் உள்ள மின் கற்றலை (E-learning) அரசு பள்ளிகளில் முன்நின்று நிறுவி வருகின்றமைக்கு எங்களது பாராட்டுக்கள். இவ்விதழை வாசித்து, தங்கள் மேலான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவை தொடந்து வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**வல்சா பெஞ்சமின் செரியன்**
இயக்குநர், தி செரியன் ஃபவுண்டேஷன்

எங்களது நான்காவது பதிப்பை படித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறேன்!

# முன்னோட்டம் 2015

கல்வி உதவி தொகை





கல்வி ஊக்கத் தொகை

ஆரம்ப சுகாதார மையத்தை நவீனமயமாக்குதல்



வெள்ள நிவாரண உதவி



உலக மகளிர் தினம்



நிதி திரட்டும் நிகழ்ச்சி





TANGLED திட்டம்

# நிறுவனத்தை பற்றி

**செயல்நோக்கு அறிக்கை:** தரமான கல்வி, அடிப்படை ஆரோக்கியம், விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பின் மூலமாக, ஒரு ஆரோக்கியமான மற்றும் சமூக உணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்.

The Cherian FOUNDATION

சென்னையில் அமைந்துள்ள தி செரியன் ஃபவுண்டேஷன், 2003 ஆம் ஆண்டு முதல் சமூக சேவையை ஆற்றிவரும் ஒரு தனியார் தொண்டு நிறுவனம். இந்நிறுவனத்தின் நோக்கம், "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். மேலும், அவர்கள் வாழ்வில் ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது.

ராஜ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தொழிஞ்சாலைகளை சுற்றி அமைந்துள்ள பகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம். நமது சேவையை விரிவாக்க, RI Dist 3230's Centenary Charitable Trust, Madras Midtown Round Table (MMRT-42), அடையாறு புற்றுநோய் மருத்துவமனை போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. நமது மூன்று முக்கிய அம்சங்களாவது:

- **கல்வியறிவு**
- **அடிப்படை ஆரோக்கியம்**
- **விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பு**

மேலும், கூட்டாண்மை சமூக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ராஜ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமூக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் அறிய www.cherianfoundation.org என்ற எங்கள் இனைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம் அல்லது 044 - 4040 4444 என்ற தொலை பேசியில் திரு.சார்லஸ் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) என்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

# கல்வியறிவு

## கல்வி உதவி தொகை

சமூகத்தில் பின் தங்கிய மாணவர்கள் கல்வி உதவி பெற திரு. நாதிர் கென்டி அவர்கள் கடந்த ஆண்டு € 1,895.00 நன்கொடையாக வழங்கினார். இத்தொகையை பிப்ரவரி 17 2014-ம் தேதியில் கனரா வங்கியின் நிலையான வைப்பில் (FD) டெபாசிட் செய்யப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வட்டி தொகை ரூ.15,398.00-யை கொண்டு இரண்டு மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை வழங்கினோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1) **மாணவியின் பெயர்** | : | ம. தீபிகா |
| **பயிலும் வகுப்பு** | : | 6 ஆம் வகுப்பு |
| **மதிப்பெண் விவரம்** | : | 478/500 |
| **தந்தை பெயர்** | : | S. மணிகண்டன் (லேட்) |
| **தாய் பெயர்** | : | D. வாணி |
| **தொழில்** | : | வீட்டு வேலை |
| **பள்ளியின் பெயர்** | : | குண்டூர் சுப்பையா பள்ளி |
| **பெற்ற உதவி தொகை** | : | ரூ. 2,510.00 |



இயக்குநர் மாணவி தீபிகாவிற்கு உதவித் தொகை வழங்குதல்

| | | |
|---|---|---|
| 2) **மாணவியின் பெயர்** | : | கலையரசி |
| **பயிலும் வகுப்பு** | : | 11 ஆம் வகுப்பு |
| **மதிப்பெண் விவரம்** | : | 309/500 |
| **தந்தை பெயர்** | : | ஐயப்ப நாதன் (லேட்) |
| **தாய் பெயர்** | : | நவநீதம் |
| **தொழில்** | : | ஹவுஸ் கீபிங் |
| **பள்ளியின் பெயர்** | : | குண்டூர் சுப்பையா பள்ளி |
| **பெற்ற உதவி தொகை** | : | ரூ. 3,230.00 |



இயக்குநர் மாணவி கலையரசிக்கு உதவித் தொகை வழங்குதல்

இவ்விரண்டு மாணவிகளும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தை சார்ந்தவர்கள். இவர்களுக்கு ஜுலை 22, 2015 அன்று கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது. இவர்கள் பள்ளிப்படிப்பு முடியும் வரை இக்கல்வி உதவி தொகை அளிக்கப்படும்.

From
Dr. Ra. RAJALAKSHMI,
M.Sc (Zoo, G & C)., M.Ed., M.Phil (M.Bio & Edu)., Ph.D.,
Headmistress
Guntur Subbiah Pillai Theagaraya Nagar
Girls' Higher Secondary School
35, VENKATNARAYANA ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.

Phone : 24345167

To
The Director,
The Cherian Foundation
T.Nagar, Chennai-17.

Sir / Madam

Dated 22.07.2015

Sub :

[illegible]

[illegible] 6 ஆம் வகுப்பு [illegible] ரூ.2510/- மற்றும் [illegible], 10 ஆம் வகுப்பு [illegible] ரூ.3230/- கல்வி உதவித்தொகை வழங்கியுள்ளீர்கள். [illegible]

நன்றி.

[illegible]

HEADMISTRESS
GUNTUR SUBBIAH PILLAI
T. NAGAR GIRLS' HR. SEC. SCHOOL
CHENNAI-600 017

பள்ளி நிர்வாகம் நன்றி கூறும் வகையில் அளித்த கடிதம்



12/8/15
Chennai-17

M. Deepika
VI std B sec
Guntur subbiah pillai T.nagar girls Hr Sec school,
T.Nagar, chennai-17.

To
The managing Director,
Cheriyan foundation,
T.nagar chennai-17

Respected Sir,

I have received the amount of Rs 2510 from your esteemed organisation I am very thankful to you for rendering me this scholarship It is very useful for my studies. I assure I will study well and score good marks.

Thanking you,

Yours faithfully,
M. Deepika



I. Kalaiarasi
XI Std "A" sec
Guntur Subbiah pillai T.nagar girls Hr Sec School
T.nagar
chennai-17

To
The managing director
cheriyan foundation
T.nagar
chennai 17

Respected Sir,
I have received the amount of Rs 3230 from your esteemed organisation I am very thankful to you for rendering me the scholarship. It is very useful for my studies. I assure, I will study well and score good marks in my public Examination

Thanking you,
yours faithfully,
I. kalaiarasi.

பயனாளிகள் நன்றி கூறும் வகையில் அளித்த கடிதம்



இயக்குநர் பயனாளிகளுடன்

இம்மாணவிகளுக்கு கல்வி உதவி புரிந்த திரு.நாதிர் கென்டி அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

## சமூக சேவா லீக் பள்ளி சீரமைத்தல்

சமூக சேவா பள்ளியை சீரமைக்க கோரி திருமதி. மரியா பிரீத்தி அவர்களிடமிருந்து முறையீட்டை பெற்றோம். இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 60,000.00. நமது ∴பவுண்டேஷன் ரூ. 15,000.00-யை இத்திட்டத்திற்கு அளித்து உள்ளது.




சீரமைப்பு வேலை நடைப்பெறும் போது

## சமூக சேவா பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்துதல்

நமது இயக்குநர் மார்ச் 27, 2015-ம் தேதி அன்று சமூக சேவா பள்ளி வளாகத்தில் தேவையற்று வளர்ந்திருந்த புதற்களையும், செடிகளையும் அகற்றி, பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்தினார்.



தூய்மையாக காட்சியளிக்கும் பள்ளி வளாகம்

## எழுத்தறிவு திட்ட வகுப்புகள்

அழிஞ்சிவாக்கத்தில் அடிப்படை கல்வி பெறாத 25 நபர்கள் ஏப்ரல் 16, 2015-ல் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். இதே போன்று ஏப்ரல் 23, 2015-ல் முகப்பேரில் புதிய வகுப்பு தொடங்கப்பட்டது. இவ்வகுப்பில் 16 புதிய நபர்களும், சென்ற வகுப்பில் கல்வியில் பின்தங்கிய நபர்கள் சிலருடன் எழுத்தறிவு திட்ட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அழிஞ்சிவாக்கத்தில் கல்வி பயிலும் 25 நபர்களுக்கும் எழுத கரும் பலகை வழங்கப்பட்டது.



முகப்பேரில் நடைபெறும் வகுப்பு



அழிஞ்சிவாக்கத்தில் நடைபெறும் வகுப்பு



புதிய வகுப்பில் பயில்பவர்கள்



பயின்று முடித்து சான்றிதழ் பெற்றவர்கள்

ராஜ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் 2015-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது எழுத்தறிவு திட்டத்தில் சிறப்பாக பயின்ற 12 நபர்களுக்கு சான்றிதழும், பரிசு பொருளும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.




அறங்காவலர்களுடன் கல்வி பயின்ற பயனாளிகள்

## கல்வி ஊக்கத் தொகை

கடந்த ஆண்டு, 75 விண்ணப்பங்கள் பெற்றோம். இதில் 90 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்ற 21 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ராஜ் ஹோல்டிங்ஸ் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது, இவர்களுக்கு கல்வி உதவி தொகை (மொத்தம் ரூ 27,000/-) மற்றும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.



அறங்காவலர்களுடன் பயனாளிகள் மற்றும் அவர்களது பெற்றோர்

# ஆரோக்கியம்

## ஆரம்ப சுகாதார மையத்தை நவீனமயமாக்குதல்

பொன்னேரி அருகே பஞ்செட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையத்தின் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு மருந்துவர்கள் முறையீடு அளித்தார். நமது நிதி திரட்டு நிகழ்ச்சியின் மூலமாக, பின் வரும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.




புதர்களை நீக்கி, மருத்துவ வளாகம் அழகுப்படுத்தப்பட்டது



பெயின்ட் அடித்தபின் மருந்துவமனையின் முகப்பு



பெயின்ட் அடித்தபின் மருந்துவமனையின் வெளிப்புறம்



முன்பிருந்த நிலை



தற்போதிய நிலை



படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள்



புறநோயாளி காத்திருக்கும் பகுதியில் கூடுதல் இருக்கைகள்



பார்மசிக்கு ரேக்



தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி



3 இருக்கைகள் கொண்ட இரு நாற்காலிகள் மற்றும் மின்விசிறி

## இத்திட்டத்திற்கு உதவிய நிதி திரட்டும் நிகழ்வுகள்

**1) தொண்டு பஜார் (Charity Bazaar):**

ஓவ்வொரு ஆண்டும், தி செரியன் ஃபவுண்டேஷன் தொண்டு பஜார் என்ற நிதி திரட்டும் நிகழ்ச்சியை நடத்தி, அதில் கிடைக்கும் வருவாயை கொண்டு பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதற்கு நன்கொடையாக பொருட்கள் வழங்கிய உங்கள் அனைவருக்கும் தி செரியன் ஃபவுண்டேஷன் அறங்காவலர்களின் சார்பாக எங்களது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தங்களின் உதவியினால் எங்களால் ரூ.1,09,172.00 நிதி திரட்டப்பட்டது.




அழிஞ்சிவாக்கத்தில் தொண்டு பஜார்

**2) கார்பரேட் பாட்னர்சிப்:**

அருகிலுள்ள நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளையும் சமூகப்பணியில் ஈடுபடுத்தும் பொருட்டு, அவர்களுக்கு ஆரம்ப சுகாதார மையத்தை நவீனமயமாக்குதலை பற்றி ஒரு திட்ட அறிக்கையை சமர்பித்தோம். M/s. HERRENKNECHT பிரைவேட் லிமிடெட் என்கிற நிறுவனம் நன்கொடையாக ரூ.1.38 லட்சம் வழங்கினர்.

நிதி உதவி செய்த HERRENKNECHT பிரைவேட் லிமிடெட் மற்றும் மெத்தை விரிப்பு, தலையணை உறைகள் வழங்கிய Fineyarns நிறுவனத்திற்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்

### நிறுவன நிர்வாகிகள் மற்றும் மருத்துவ குழுவுடன் நடந்த சந்திப்பு

M/s. HERRENKNECHT பிரைவேட் லிமிடெட் நிர்வாகிகள், பஞ்சாயத்து தலைவர், வட்ட கவுண்சிலர், டாக்டர்கள் மற்றும் சுகாதார கண்காணிப்பாளர் அவர்களுடன் ஒரு சிறப்பு சந்திப்பு மருத்துவமனை வளாகத்தில் நவம்பர் 5, 2015 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராஜ் ஹோர் இன்டர்நேசனல் பி. லிமிடெட் பணியாளர்கள் நன்கொடையாக கொடுத்த தொகை ரூ. 10,300/-யை பங்களிப்பாக தொழிஞ்சாலை மேலாளர் அவர்கள் வழங்கினார்.



மேலாண்மை அறங்காவலர் PHC-ல் வழங்கப்பட்டுள்ள வசதிகளை விளக்குகிறார்



நிறுவன நிர்வாகிகள் மற்றும் மருத்துவ குழுவுடன் சந்திப்பு

### பஞ்செட்டி ஆரம்ப சுகாதார மையம் அளித்த சானிடரி நாப்கின்களை வினியோகித்தல்

140 சானிடரி நாப்கின்களை பஞ்செட்டி ஆரம்ப சுகாதார மையத்தில் இருந்து இலவசமாக பெற்றோம். அதை நமது பணியாளர்களுக்கு செப்டம்பர் 15, 2015 அன்று விநியோகித்தோம்.



பயனாளிகள்

### உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினம்

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10-ம் தேதி உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. "தற்கொலை தடுத்தல்: உயிர்களை காப்பாற்றுதல்" என்ற தலைப்பை சர்வதேச தற்கொலை தடுப்பு சங்கம் மற்றும் உலக சுகாதார அமைப்பும் மையமாக கொண்டு இவ்வாண்டு செயல்படுகிறது. இந்த நாளில் சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்களை விநியோகித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். தேவையான உபகரணங்கள் வழங்கிய சிநேகா ஃபவுண்டேஷனுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.








எமது அறிவிப்பு பலகையில் விழிப்புணர்வு சுவரொட்டி

### கண்புரை அறுவை சிகிச்சை

பம்மலில் அமைந்துள்ள சங்கரா கண் மருத்துவமனையின் அறக்கட்டளை நிதிக்கு ரூ. 10,000/- 2012-ஆம் ஆண்டு நமது ஃபவுண்டேஷன் நன்கொடையாக வழங்கியது. இந்நிதியில் கிடைக்கும் வங்கி வட்டியின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் ஆதரவற்றோருக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இவ்வாண்டு, திரு. கணேஷன் அவர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.



Jaya Jaya Sankara — Hara Hara Sankara

**SANKARA EYE HOSPITAL**

No. 1, Third Cross Street, Sri Sankara Nagar,
PAMMAL, CHENNAI - 600 075.
Website: www.kannoli.net / E-mail: info@kannoli.net
☎ 044-22484799, 22485299

ISO 9001 CERTIFIED

Trustees : Rtn. B. P. Jain, FCA, Dr. P. Janakiraman, Dr. R. V. Ramani, Sri S. Visvanathan, Sri V. Lakshmanan, Sri Jagdish M. Chanrai
Our Patrons : Sri V.G. Raghavan, Sri N.R. Chandran, Sri T.R. Rajagopalan, Sri Jain Dhaval J. Chandan, Sri Mangal Chand Tater

SEH/2015/DONATION-INFO — April 01, 2015

To

M/s.Cherian Foundation,
No.38, Maloniy Road,
T.Nagar,
Chennai – 600 017.
Ph: 4204 3035 / 36.

Respected Sir/Madam,

Sub: KANNOLI – VISION SAVER FREE CATARACT SURGERY.

We have performed FREE cataract surgery with IOL for **one patient** utilizing the interest accrued by your endowment.

| Name & Address | Age/Sex | D O S | Eye Operated |
|---|---|---|---|
| Sri. Ganesan, (MRD No. 310832) S/o Ramaswamy, No.22/9,N.S.K.Street, Chengalpet,TN. | 61/M | 31.03.15 | Right Eye |

He is extremely happy and the vision restoration is good. We once again thank you for your assistance. We have enclosed one copy of our appeal to you for strengthening our corpus fund. We welcome you, your relatives and friends to visit our hospital and encourage us in our "KANNOLI PROJECT".

Thanking You,

For Sankara Eye Hospital,

(J.BABU)
General Manager
94443-80698

**Note: Whenever you change the address please intimate. Please furnish your email-id also**

SEH/LH/01/02-15

சங்கரா கண் மருத்துவமனையிருந்து வந்த கடிதம்

# சமுதாய பங்கேற்பு

## Tangled திட்டம்

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் மருத்துவ சிகிச்சையின் போது தலை முடியை இழக்கிறார்கள், அவர்களுக்கு விக் வழங்க, முடி தானம் செய்யும் முயற்சியே Tangled திட்டமாகும். இத்திட்டம் நோயாளிகளுக்கு தன்னம்பிக்கை கொடுத்து அவர்களை மகிழ்விக்கும் வகையில் செயல்படுகிறது.

இத்திட்டம் உலக புற்று நோய் தினம் 2014 அன்று பெண்கள் கிறிஸ்துவ கல்லூரியின் Rotaract குழுமம், ராஜ் ஹேர் இன்டர்நேஷனல் மற்றும் கிரீன் டிரென்ட்ஸ் சலூன் இணைந்து தொடங்கினார்கள். கிரீன் டிரென்ட்ஸ் சலூன்களில் முடிகள் சேகரிக்கப்பட்டு, ராஜ் ஹேர் இன்டர்நேஷனலில் விக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டம் தமிழ்நாடு மட்டுமல்லாமல் பிற மாநிலத்திலும் 3500-க்கும் மேற்பட்டோர் தங்கள் முடியை தானம் செய்தார்கள். 2014-ல், இத்திட்டத்தின் மூலமாக 120 விக்குகளை புற்றுநோயாளிக்கு இலவசமாக வழங்கியுள்ளோம்.



அறங்காவலர் விக்குகளை நன்கொடையாக வழங்குகிறார்

இதை தவிர, அதிகார பூர்வமாக வெளி நாடுகளிலிருந்து நன்கொடை பெறவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நமது தி செரியன் ஃபவுண்டேஷன் செயல்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு, இத்திட்டத்தை நுங்கம்பாக்கத்தில் உள்ள பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் நடிகர் சரத் குமார் அவர்களால் ஜனவரி 29, 2015, அன்று தொடங்கப்பட்டது. முடி தான வழிப்புணர்வு பிப்ரவரி மாதம் முதல் இரண்டு வாரங்கள் நடைப்பெற்றது. இதன் மூலமாக 250 விக்குகள் செய்யும் அளவிற்கு முடிகளை பெற்றோம்.



முடி தான வழிப்புணர்வு

**Tangled திட்டம் பங்கேற்க:**
1. ஒரு விக்கிற்கான ரூ. 4,500 நன்கொடையாக அளித்தல்
2. முடியை வெட்டி நன்கொடையாக வழங்குதல்
3. திட்டத்தைப் பற்றி விழிப்புணர்வு எற்படுத்துதல்

## 8வது மகளிர் தின விழா 2015

இவ்வாண்டின் தலைப்பு "பெண்களை மேம்படுத்துவோம், மனித நேயம் மேம்படுத்துவோம், அதை இப்பொழுதே செயல்படுத்துவோம்". திருமதி. காயத்திரி மற்றும் திருமதி. சசிகலா அவர்களின் தமிழ் தாய் வாழ்த்து பாடலுடன் இந்நிகழ்ச்சி தொடங்கியது. திருமதி. விஜி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். திருமதி. செல்லமா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவின் சிறப்பு விருந்தனர் Regional கவுன்சிலின் தலைவியாகவும், சர்வதேச திட்டமிட்ட Parenthood கூட்டமைப்பின் தலைவியாகவும், இந்திய குடும்ப கட்டுப்பாடு நிறுவனத்தின் தேசிய தலைவியாகவும் இருக்கும் திருமதி. சுஜாதா நடராஜன் அவர்கள். அவரது சிறப்புரையில் பல்வேறு நாடுகளில் உள்ள பெண்களின் நிலையை எடுத்துரைத்தார்.


சிறப்பு விருந்தனரின் உரையாடல்

திருமதி. ஹேமலதா அவர்கள் ஆடியோ விஷுவல் மற்றும் வார்த்தை விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார். திரு.பெஞ்சமின் செரியன் அவர்கள் மின்-கற்றல் கல்வி முறையை விளக்கி காட்டினார். அனைவருக்கும் தேனீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. திருமதி. சூரியகலை அவர்கள் நன்றியுரையாற்றினார். தேசிய கீதம் பாடிய பின் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.


ஆடியோ விஷூவல் வினாடி வினா

## ரோட்டரி மாதிரி பள்ளியின் ஆண்டு விழா

ஏப்ரல் 1, 2015 அன்று முகப்பேரில் உள்ள ரோட்டரி மாதிரி பள்ளியில் ஆண்டு விழா நடைப்பெற்றது. விருந்தினர்கள், குழந்தைகள், மற்றும் பெற்றோர்களுக்கு தி செரியன் ஃபவுண்டேஷன் சிற்றுண்டிகளை வழங்கி சிறப்பித்தது.


பார்வையாளர்கள்


சிறப்பு நிகழ்ச்சி

### குழந்தை காப்பகத்திற்கு பொம்மைகள் நன்கொடை

அறங்காவலர் திருமதி. சாரா B செரியன் அவர்கள் அழிஞ்சிவாக்கத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்திற்கு பொம்மைகள் நன்கொடையாக வழங்கினார்.





காப்பக குழந்தைகளுடன் இயக்குநர்

### வெள்ள நிவாரண பொருட்கள் விநியோகம்



வெள்ள நிவாரண முகாமில் பயனாளிகள்

திரு. முத்து மாரியப்பன் மூலமாக, தாம்பரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவ நன்கொடையாக தி செரியன் ஃபவுண்டேஷன் ரூ. 10,000/- வழங்கியது. கிரீம்ஸ் ரோட்டில் பாதிக்கப் பட்ட 40 மக்களுக்கு திரு. சூசை மூலமாக, உடைகள் மற்றும் பிஸ்கெட் வழங்கப் பட்டது.

### நமது நிறுவனம் தத்தெடுத்த இரண்டு பள்ளிகளில் கிறிஸ்துமஸ் விழா

#### 1) சமூக சேவா பள்ளி

டிசம்பர் 22 2015, அன்று இராணி மேரி கல்லூரி முதல்வர், சமூக சேவா பள்ளியின் நிருபர், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 30 குழந்தைகளுடனும் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. இத்தருணத்தில் குழந்தைகளுக்கு பாய், படுக்கை விரிப்பு, தலையணை உறை, துண்டு, டெட்டால் சோப்பு, நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ஷார்பனர் மற்றும் ரப்பர் ஆகியவற்றை வெள்ள நிவாரண பொருளாக வழங்கப்பட்டது.



சமூக சேவா பள்ளியில் இயக்குநர் மற்றும் அறங்காவலர்



மணவர்களின் சிறப்பு நடனம்



அறங்காவலர் திருமதி. சாரா B செரியன் வெள்ள நிவாரண பொருட்களை மாணவர்களுக்கு வழங்குதல்



இயக்குநர் திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் வெள்ள நிவாரண பொருட்களை மாணவர்களுக்கு வழங்குதல்

#### 2) ரோட்டரி மாதிரி பள்ளி

டிசம்பர் 23, 2015 அன்று 141 மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது. மாணவர்கள் கேரல் பாடல்கள் பாடி, தங்களது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் அறங்காவலர் களுக்கு தெரிவித்தனர்.





ரோட்டரி மாதிரி பள்ளியில்

## அறங்காவலர்களின் செய்தி

**திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்**



ரோட்டரி நூற்றாண்டு தொண்டு நிறுவனத்தின் நிறுவனரான இவர், ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு மிஷனின் TEACH திட்டத்தில் உள்ள மின் கற்றல் மையங்களை (E-learning Centres) 100 அரசு பள்ளிகளில் முன்நின்று 2016 ஆண்டில் நிறுவுகிறார். மேலும் இந்நிறுவனம், சென்னையில் 33 பள்ளிகள், கோயம்பத்தூர் மற்றும் புதுசேரியில் தலா 7 பள்ளிகளில், கழிப்பறை மற்றும் கைகழுவும் வசதிகள் ஏற்படுத்த "Support My School" என்ற திட்டத்தில் ஏர்செல் மற்றும் சாரிட்டி எயிட் ஃபவுண்டேஷன் மூலமாக ரூ. 66 லட்சம் நிதியை பெற்றுள்ளது.

**திரு. ஜார்ஜ் B செரியன், அறங்காவலர்**



மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் MMRT-42 வின் தலைவராக திரு. ஜார்ஜ் B செரியன் அவர்கள், பள்ளிக்கரணையில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளிக்கு 1.45 கோடி ரூபாய் நிதி திரட்டி, 18 வகுப்பறைகள் கட்டினார். தமது 2014-2015 ஆம் ஆண்டின் சிறந்த சேவைக்காக, Area 2-ல் 11 விருதுகளும், ரவுண்டேபிள் இந்தியாவின் சார்பில் 5 விருதுகளும் பெற்றார். மேலும், ரோட்டரி மாவட்டம் 3230-வின் மாவட்ட மாநாடு உத்சவ் மற்றும் ரோட்டரி எக்ஸ்போ 2016 ஆகிய நிகழ்ச்சிக்கு தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.





அறங்காவலர் ஜார்ஜ் B செரியன் Area 2-ல் விருதுகளை பெறுகிறார்





MMRT -42 வில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான விருதுகள்



சாரா & விவேக் மற்றும் ஜார்ஜ் & கரீனா அவர்களுக்கு வாழ்த்துக்கள்



## எங்களது உளமார்ந்த நன்றிகள்

**ஆதரவாளர்கள்**

- திரு. நாதிர் கெண்டி
- Herrenknecht பிரைவேட் லிமிடெட்
- குண்டூர் சுப்பையா பள்ளி
- ஆரம்ப சுகாதார மையம், பஞ்செட்டி
- திரு. அரின் பிரம்மா
- திருமதி. அர்ச்சனா, Fineyarns
- சங்கரா கண் மருத்துவமனை
- சிநேகா ஃபவுண்டேஷன்

**தொண்டு பஜாரின் நன்கொடையாளர்கள்**

- திருமதி. காயத்திரி
- திருமதி. பத்மா மகேஷ்
- திருமதி. சரோஜினி அஜித்
- திரு. வாசுதேவ தாஸ்
- மேதினி & ராவ்
- திருமதி. பூர்ணிமா
- திருமதி. பங்கஜம் வாசுதேவன்
- செல்வி. திவ்யா ராம்பிரசாத்
- திருமதி. இந்திரா
- திருமதி. அனிதா ஸ்ரீநாத்
- திருமதி. பிரமிளா ராமசந்திரன்
- திரு. கிறிஸ்டோபர் தேவபிரகாசம்
- திரு. ஸ்ரீதர்
- திருமதி. பக்ரியா கப்பாசி
- திருமதி. ஜெயஸ்ரீ மிட்டல்
- திருமதி. மஞ்சுளா சாயீராம்
- திருமதி. ஷிவானி
- திருமதி. தனு
- திரு. அஸ்வின் & காஷிஷ்
- திரு. ரவி (அமெரிக்கா)
- டாக்டர். பிரக்னா
- திருமதி. ஜோதி காசிவிஷ்வநாதன்
- திருமதி. நீலிமா
- திரு. டப்ரெஸ் ஹபீப்
- திருமதி. ஷாலினி வூரா
- செல்வி. அர்ச்சனா

**ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றிகள்**

RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDINGS Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt. Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt. Ltd

B & H EXPORTS

RAJ TRADING

### நன்கொடை விவரங்கள்:

தங்கள் நன்கொடைகளை "The Cherian Foundation" என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 கீழ் வரி விலக்கு பெறுகின்றன.

**வங்கி கணக்குடையவர் பெயர்:** The Cherian Foundation
**வங்கி பெயர் மற்றும் கிளை:** ICICI Bank, Teynampet
**கணக்கு வகை:** சேமிப்பு கணக்கு
**கணக்கு எண்:** 000101212525
**ஆர்டிஜிஎஸ் / என்இஎப்டி / ஐஎப்எஸ்சி குறியீடு:** ICIC 00000001


### எங்கள் முகவரி

38, மெலோனி ரோடு, தி. நகர், சென்னை - 600 017
தொலைப்பேசி: 044 - 4040 4444
projects@cherianfoundation.org
www.facebook.com/thecherianfoundation
www.cherianfoundation.org



### ஆசிரியர் குழு

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்
திருமதி. கரீனா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்
திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர் TCF